<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

<u>முன்னிலை திரு.தி.திருமால், பி.ஏ., பி.எல்.,</u>

<u>கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம்,(பொறுப்பு).</u>

<u>2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ஆம் நாள் வெள்ளிக் கிழமை</u>

<u>அசல் வழக்கு எண்.188/2013</u>

<u>CNR No.TNKP.7000495/2013.</u>

S.ஜேம்ஸ் பெட்ரிக்

....வாதி

/எதிராக/

1.S.P.N.சத்யமூர்த்தி

2.S.P.N.கிருஷ்ணமூர்த்தி (இறப்பு)

(Amended as per Order in I.A.No.4/2025 dated 17.07.2025)

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 17.03.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.ராஜவேலு அவர்கள் முன்னிலையாகியும், முதல் பிரதிவாதிக்காக M/s.ரா.பாலசந்திரன், இ.எல்.நரேந்திரகுமார் மற்றும் வை.கோ.குகன் முருகன் ஆகியோர் முன்னிலையாகியும், இரண்டாம் பிரதிவாதி இறந்துவிட்டார், எனவே இருதரப்பிலும் உள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

வாதி இந்த வழக்கினை, வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் பிரதிவாதிகளோ, அவரது ஆட்கள் மற்றும் முகவர்கள் குறுக்கீடு செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தில் பிரதிவாதிகளோ, அவரது ஆட்கள் மற்றும் முகவர்கள் கட்டுமானங்கள் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.<u>வாதியின் வழக்குரையின் சுருக்கம்</u>

வாதி தனது வழக்குரையில், வாதியானவர் ஸ்ரீபெரும்புதூரில் பல்வேறு சர்வே எண்களை உள்ளடக்கிய மொத்தம் 24 ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரர் என்றும், மேற்படி 24 ஏக்கர் நிலத்திலிருந்து 18.77 ஏக்கர் நிலத்தினை கடந்த 1991 ஆம் ஆண்டு கோரமெண்டல் கிளப் என்ற தனியார் கம்பெனிக்கு ஹோட்டல் நடத்துவதற்காக குத்தகைக்கு விட்டதாகவும், விதிகளுக்குட்பட்டு போதுமான கட்டுமானங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி குத்தகை இன்றைய தேதிவரை தொடர்வதாகவும், மேற்படி தனியார் நிறுவனம் அவர்களது தொழிலுக்கு தேவையான கட்டுமானங்களை ஏற்படுத்தியதாகவும், கடந்த 2008 ஆம் ஆண்டு வாதி தான் பயன்படுத்தாத இடத்தில் W. ராஜேஷ் என்பவருடன் கூட்டு சேர்ந்து ஈஸ்ட் வெஸ்ட் ரெசார்ட் என்கிற பங்குதாரர் நிறுவனத்தை நோக்கியா செல்போன் கம்பெனி எதிரில் ஆரம்பித்ததாகவும், பின்னர் மேற்படி ராஜேஷ், 1 மற்றும் 2 பிரதிவாதிகளை தனக்கு பதிலாக பங்குதாரர்களாக சேர்த்துவிட்டு மேற்படி பங்குதாரர் நிறுவனத்திலிருந்து விலகியதாகவும், பிரதிவாதிகளை பங்குதாரர்களாக சேர்க்கும்பொழுது வாதிக்கும் அவரது மகள் அமிர்தா பெட்ரிக் என்பவருக்கும் மேற்படி பங்குதாரர் நிறுவனத்தில் 50 சதவீத பங்கு இருந்தாகவும், மீதமுள்ள 50 சதவீத பங்கு 1 மற்றம் 2 பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றும், அதன்பின்னர் 1 மற்றும் 2 பிரதிவாதிகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு வாதியை பங்குதாரர் நிறுவனத்திலிருந்து கணக்கு வழக்குகளை பைசல் செய்யாமல் விலக்கிவிட்டதாகவும், அதனால் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டது என்றும், சர்வே எண்.1487/5ஏ– ல் அடங்கிய மொத்த வழக்கு சொத்தையும் வாதி கடந்த 25.11.1977

தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் முன்னிலைக்கு வாங்கியதாகவும், அதற்கு வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டதாகவும், வழக்கு சொத்து வாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், பிரதிவாதிகளுக்கு அதில் எந்த உரிமையும் இல்லை என்றும், வழக்கு சொத்தான சர்வே எண்.1487/5ஏ–யில் அடங்கிய 165 சதுர மீட்டர், சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக இந்திய அரசாங்கத்தால் தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் 18.03.2003 தேதியிட்ட செயல்முறைகள் ந.க.எண்.14/2002/N.H.4/Unit–3–ன் கீழ் கையகப்படுத்தப்பட்டது என்றும், அதற்கான நோட்டீஸ் வாதி பெயரில் அனுப்பப்பட்டது என்றும், அதற்கான இழப்பீட்டு தொகையும் வாதி பெயரில்தான் வழங்கப்பட்டது என்றும், அரசாங்கத்தால் நிலம் கையகப்படுத்தியது போக மீதமுள்ள நிலம், சர்வே எண்.1487/5ஏ1 என்றும், அரசாங்கம் கையகப்படுத்திய நிலம் சர்வே எண்.1487/5ஏ2 எனவும் உட்பிரிவுகளாக மாற்றம் செய்யப்பட்டது என்றும், அரசாங்கத்தால் கையகப்படுத்தியது போக மீதமுள்ள பகுதி தற்போதைய வழக்கு சொத்து என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி சூழ்நிலையில் வாதி அரசாங்கம் கையகப்படுத்தியதுபோக மீதமுள்ள பகுதியில், தனது சொந்த உபயோகத்திற்காக அதாவது விவசாய கருவிகள் மற்றும் அது சம்பந்தமான பழுதான பொருட்களை வைப்பதற்காகவும் கட்டிடம் கட்டினார் என்றும், அதன்பின்னர் சமீபத்தில் மேற்படி கட்டிடத்தில் முதல் தளம் அமைத்து கூரை போட்டதாகவும், இதற்கிடையில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஈஸ்ட் வெஸ்ட் ரிசார்ட் பங்கு நிறுவனத்தினை நிர்வகிப்பது குறித்தும், லாபத்தை பிரித்து கொள்வது குறித்தும் பிரச்சினை ஏற்பட்டது என்றும், பிரதிவாதிகள் இருவரும் வழக்கு சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில், கடந்த 27.08.2013 அன்று

ரௌடிகளை அழைத்து வந்து வழக்கு சொத்தை வாதி பயன்படுத்துவதை தடுக்க முயற்சித்ததாகவும், எனவே வாதி பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவும், அதன்பொருட்டு பிரதிவாதிகள் அமைதியாகிவிட்டதாகவும், ஆனால் மறுபடியும் கடந்த 30.08.2013 அன்று பிரதிவாதிகள் இருவரும் வழக்கு சொத்தில் அத்து மீறி நுழைந்து அதனை வாதியிடமிருந்து அபகரித்து கொண்டு, வாதியை வழக்கு சொத்தில் அனுமதிக்கவில்லை என்றும், மேலும் பிரதிவாதிகள் இருவரும் வழக்கு சொத்தில் சட்டவிரோதமாக கட்டிடங்கள் கட்டினார்கள் என்றும், வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் குறுக்கீடு செய்வதற்கோ அல்லது கட்டுமானங்கள் கட்டுவதற்கோ பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், மேற்படி பிரச்சினை குறித்து வாதி காவல்துறையை அனுகியபோது அவர்கள் சிவில் நீதிமன்றத்தை அனுகி பிரச்சினையை தீர்த்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள் என்றும், எனவே, வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இரண்டாம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் இரண்டாம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்ததால் அவரது வாரிசுகள் வழக்கில் சேர்க்கவில்லை என்றும் வாதி தெரிவித்துள்ளார்.

<u>3. முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரை சுருக்கம்</u>

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், தான் பங்குதாரர் நிறுவனமான East West Resort நிறுவனத்தின் பங்குதாரர் என்றும், தாவா சொத்தானது

பங்குதாரர் நிறுவனமான East West Resort நிறுவனத்தின் அனுபவத்தில் உள்ளது என்றும், வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், மேலும் East West Resort நிறுவனத்தின் வியாபாரத்தை சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 25.04.2011 அன்று OA.No.178/2011 மற்றும் OA.No.179/2011 ஆகிய மனுக்களில் வழங்கிய உத்தரவின்படி பிரதிவாதி நடத்தி வருவதாகவும், மேற்படி East West Resort நிறுவனத்தை வாதி மற்றும் ராஜேஷ் ஆகியோரால் கடந்த 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்றும், பின்னர் 22.09.2009 அன்று மாற்றி அமைக்கப்பட்ட பங்குதாரர் பத்திரத்தின்படி வாதியின் மகள் அமிர்தா பெட்ரிக் பங்குதாரராக சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றும், பின்னர் 23.09.2009 அன்று ஏற்படுத்தப்பட்ட மாற்றி அமைக்கப்பட்ட பத்திரத்தின்படி J.S.R.Construction உரிமையாளர் ராஜேஷ் என்பவர் பங்குதாரர் நிறுவனத்திலிருந்து வெளியேறி, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பங்குதாரர்களாக இணைந்து கொண்டதாகவும், பின்னர் 23.09.2009 அன்று மாற்றி அமைக்கப்பட்ட பங்குதாரர் பத்திரத்தின்படி வாதியும் வாதியின் மகள் அமிர்தா பெட்ரிக்கும் வெளியேறிவிட்டனர் என்றும், இந்நிலையில் வாதி பிரதிவாதிகளை மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு, தான் பங்குதாரர் நிறுவனத்திலிருந்து வெளியேறவில்லை என்று மோசடியாக கூறிக் கொண்டும், வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் தன்னுடைய அனுபவத்தில் இருப்பதாக காட்டிக்கொண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் OA.No.177, 178, 179 மற்றும் 180/2011 ஆகிய மனுக்களை தாக்கல் செய்து, அந்த மனுக்களில் 24.02.2011 அன்று ஒரு தடை உத்தரவை பெற்றார் என்றும், இந்நிலையில் 178/2011–இல் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி வழக்கறிஞர் ஆணையர் மேற்படி பிரதிவாதியின் East West Resort நட்சத்திர ஹோட்டலை பார்வையிட்டு கடந்த 28.03.2011 அன்று ஒரு

அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், அந்த அறிக்கையின்படி East West Resort நிறுவனத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துள்ளார் என்றும், அவ்வாறு அமைக்கப்பட்ட சுற்றுச்சுவருக்குள் ஒரு பகுதியாக தாவா சொத்தும் East West Resort–ன் அனுபவத்தில் இருப்பதை உறுதி செய்தும் அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 22.03.2011 தேதியிட்ட உத்தரவின்படி ஏற்கனவே வழங்கிய 24.02.2011 East West Resort–ன் வியாபாரத்தை தொடர்ந்து நடத்த பிரதிவாதிகளுக்கு வழங்கி உத்தரவிட்டது என்றும், மேற்படி அனுமதி உத்தரவானது காலவரையின்றி நீடித்து உத்தரவு வழங்கப்பட்டது என்றும், அந்த உத்தரவு இன்று வரை நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் வாதி மேற்படி சங்கதிகளை மறைத்து தன்னுடைய மற்றொரு நிறுவனமான கோரமண்டல் கிளப் என்ற நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி மேற்படி வாதி மற்றும் கோரமண்டல் கிளப் நிறுவனத்தின் சொத்துக்களை பிரதிவாதிகள் அபகரித்துவிட்டதாக ஒரு போலியான புகாரை வழங்கி அந்தப் புகாரானது குற்ற எண்.110/2011 –ன்படி காஞ்சிபுரம் மாவட்ட குற்றவியல் காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்டது என்றும், இந்நிலையில் வாதி மேற்படி சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி தான் மேற்படி East West Resort நிறுவனத்தின் பங்குதாரராக தொடர்ந்து நீடிப்பது போல போலியாக தெரிவித்துக் கொண்டு சுற்றுச்சுவரை இடித்து East West Resort–ன் வியாபாரத்தை அபகரித்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்ததோடு மட்டுமல்லாமல், இடைக்கால மனு எண்.662/2013 என்ற மனுவை தாக்கல் செய்து ஒரு ஒருதலைபட்டச உத்தரவை பெற்று, அந்த உத்தரவை பயன்படுத்தி கடந்த

31.08.2014 அன்று East West Resort –ல் கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவரில் ஒரு பகுதியை இடித்தும் பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்றும், எனவே, இது குறித்து East West Resort நிறுவனத்தின் மேலாளர் முரளி அளித்த புகாரின் பெயரில் ஸ்ரீபெரும்புதூர் காவல் துறையினர் குற்ற எண்.730/2014 –ன்படி வழக்கு பதிவு செய்து குற்ற நடவடிக்கைளில் வாதிக்கு துணையாக இருந்து செயல்பட்ட சில நபர்களை கைது செய்தனர் என்றும், இந்நிலையில் வாதி தான் சுற்றுச்சுவரை உடைத்ததை உறுதிபடுத்தியும், இந்த வழக்கில் இடைக்கால மனு எண்.662/2013–ல் வழங்கப்பட்ட உத்தரவை மேற்கோள் காட்டியும் தனக்கு முன்பிணை வழங்க வேண்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.24067/2004 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றும், அந்த மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் கடந்த 10.10.2024 அன்று மேற்படி வாதி தாக்கல் செய்த முன் பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது என்றும் அந்த உத்தரவில் சென்னை உயர்நீதிமன்றம் வாதி இடைக்கால மனு எண்.662/2013ல் பெறப்பட்ட உத்தரவினை ஏற்றுக்கொள்ள மறுத்து, மேற்படி முன் பிணை மனுவை தள்ளுபடி செய்துள்ளது என்றும், இந்நிலையில் மேற்படி வாதியால் இடிக்கப்பட்ட சுற்றுச்சுவர் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு East West Resort நிறுவனம் தொடர்ந்து தனது வியாபார நிறுவனத்தை தாவா சொத்து உட்பட தன்னுடைய அனுபவத்தில் வைத்துக் கொண்டு ஆண்டு அனுபவித்து வருகிறது என்றும், இந்நிலையில் இந் வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டது நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

4.<u>வழக்கெழு வினாக்கள்</u>

1. வாதி வழக்கு சொத்தில் சட்டப்பூர்வமாக அனுபவத்தில் இருக்கிறாரா? வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் இடையூறு செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

2. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் கட்டுமானங்கள் கட்டக்கூடாது என்கிற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?

3. வாதிக்கு வழங்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

5. வாதி தரப்பில் வாதி ஜேம்ஸ் பெட்ரிக் வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் முதல் பிரதிவாதி சத்தியமூர்த்தி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் மேலாளர் முரளிகிருஷ்ணன் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>6. வழக்கெழு வினா 1 முதல் 3–ற்கான தீர்வு</u>

வாதி தனது வழக்குரையில், வாதியானவர் திருபெரும்புதூரில் பல்வேறு சர்வே எண்களை உள்ளடக்கிய மொத்தம் 24 ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரர் என்றும், மேற்படி 24 ஏக்கர் நிலத்திலிருந்து 18.77 ஏக்கர் நிலத்தினை கடந்த 1991 ஆம் ஆண்டு கோரமெண்டல் கிளப் என்ற தனியார் கம்பெனிக்கு ஹோட்டல் நடத்துவதற்காக குத்தகைக்கு விட்டதாகவும், விதிகளுக்குட்பட்டு போதுமான கட்டுமானங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி குத்தகை இன்றைய தேதிவரை தொடர்வதாகவும், மேற்படி தனியார் நிறுவனம் அவர்களது தொழிலுக்கு தேவையான கட்டுமானங்களை ஏற்படுத்தியதாகவும் கூறுகிறார்,

7. கடந்த 2008 ஆம் ஆண்டு வாதி தான் பயன்படுத்தாத இடத்தில் W. ராஜேஷ் என்பவருடன் கூட்டு சேர்ந்து ஈஸ்ட் வெஸ்ட் ரெசார்ட் என்கிற பங்குதாரர் நிறுவனத்தை நோக்கியா செல்போன் கம்பெனி எதிரில் ஆரம்பித்ததாகவும், பின்னர் மேற்படி ராஜேஷ், 1 மற்றும் 2 பிரதிவாதிகளை தனக்கு பதிலாக பங்குதாரர்களாக சேர்த்துவிட்டு மேற்படி பங்குதாரர் நிறுவனத்திலிருந்து விலகியதாகவும், பிரதிவாதிகளை பங்குதாரர்களாக சேர்க்கும்பொழுது, வாதிக்கும் அவரது மகள் அமிர்தா பெடரிக் என்பவருக்கும் மேற்படி பங்குதாரர் நிறுவனத்தில் 50 சதவீத பங்கு இருந்தாகவும், மீதமுள்ள 50 சதவீத பங்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றும், அதன்பின்னர் 1 மற்றும் 2 பிரதிவாதிகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு வாதியை பங்குதாரர் நிறுவனத்திலிருந்து கணக்கு வழக்குகளை பைசல் செய்யாமல் விலக்கிவிட்டதாகவும், அதனால் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டது என்று கூறுகிறார்.

8. சர்வே எண்.1487/5ஏ– ல் அடங்கிய மொத்த வழக்கு சொத்தையும் வாதி கடந்த 25.11.1977 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் முன்னிலைக்கு வாங்கியதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி கிரைய ஆவணம் வாதி தரப்பில் **வா.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டதாகவும் வாதி தெரிவித்துள்ளார். மேற்படி பட்டா வாதி தரப்பில் **வா.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சிட்டா மற்றும் அடங்கல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து வாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், பிரதிவாதிகளுக்கு அதில் எந்த உரிமையும் இல்லை என்றும், வழக்கு சொத்தான சர்வே எண்.1487/5ஏ–யில் அடங்கிய 165 சதுர மீட்டர், சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக இந்திய அரசாங்கத்தால் தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் 18.03.2003 தேதியிட்ட செயல்முறைகள் ந.க.எண்.14/2002/ N.H.4/Unit–3–ன் கீழ் கையகப்படுத்தப்பட்டது என்றும், அதற்கான நோட்டீஸ் வாதி

பெயரில் அனுப்பப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். அந்த நோட்டிஸ் **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கான இழப்பீட்டு தொகையும் வாதி பெயரில்தான் வழங்கப்பட்டது என்றும், அரசாங்கத்தால் நிலம் கையகப்படுத்தியது போக மீதமுள்ள நிலம், சர்வே எண்.1487/5ஏ1 என்றும், அரசாங்கம் கையகப்படுத்திய நிலம் சர்வே எண்.1487/5ஏ2 எனவும் உட்பிரிவுகளாக மாற்றம் செய்யப்பட்டது என்றும், அரசாங்கத்தால் கையகப்படுத்தியது போக மீதமுள்ள பகுதி தற்போதைய வழக்கு சொத்து என்றும், மேற்படி சூழ்நிலையில் வாதி அரசாங்கம் கையகப்படுத்தியது போக மீதமுள்ள பகுதியில், தனது சொந்த உபயோகத்திற்காக அதாவது விவசாய கருவிகள் மற்றும் அது சம்பந்தமான பழுதான பொருட்களை வைப்பதற்காகவும் கட்டிடம் கட்டினார் என்றும் தெரிவித்துள்ளார்.

9. அதன்பின்னர் சமீபத்தில் மேற்படி கட்டிடத்தில் முதல் தளம் அமைத்து கூரை போட்டதாகவும், இதற்கிடையில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஈஸ்ட் வெஸ்ட் ரெசார்ட் பங்கு நிறுவனத்தினை நிர்வகிப்பது குறித்தும், லாபத்தை பிரித்து கொள்வது குறித்தும் பிரச்சினை ஏற்பட்டது என்றும், பிரதிவாதிகள் இருவரும் வழக்கு சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில், கடந்த 27.08.2013 அன்று ரௌடிகளை அழைத்து வந்து வழக்கு சொத்தை வாதி பயன்படுத்துவதை தடுக்க முயற்சித்ததாகவும், எனவே வாதி பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். அந்த புகார் **வா.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பொருட்டு பிரதிவாதிகள் அமைதியாகிவிட்டதாகவும் தெரிவிக்கிறார்.

10. ஆனால் மறுபடியும் கடந்த 30.08.2013 அன்று பிரதிவாதிகள் இருவரும் வழக்கு சொத்தில் அத்து மீறி நுழைந்து அதனை வாதியிடமிருந்து அபகரித்து கொண்டு, வாதியை வழக்கு சொத்தில் அனுமதிக்கவில்லை என்றும், மேலும் பிரதிவாதிகள் இருவரும் வழக்கு சொத்தில் சட்டவிரோதமாக கட்டிடங்கள் கட்டினார்கள் என்றும், வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் குறுக்கீடு

செய்வதற்கோ அல்லது கட்டுமானங்கள் கட்டுவதற்கோ பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், மேற்படி பிரச்சினை குறித்து வாதி காவல்துறையை அனுகியபோது அவர்கள் சிவில் நீதிமன்றத்தை அனுகி பிரச்சினையை தீர்த்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள் என்றும், எனவே, வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

11. வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இரண்டாம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் இரண்டாம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்ததால் அவரது வாரிசுகள் வழக்கில் சேர்க்கவில்லை என்றும் வாதி தெரிவித்துள்ளார்.

12. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், தான் பங்குதாரர் நிறுவனமான East West Resort நிறுவனத்தின் பங்குதாரர் என்றும், தாவா சொத்தானது பங்குதாரர் நிறுவனமான East West Resort நிறுவனத்தின் அனுபவத்தில் உள்ளது என்றும், வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், மேலும் East West Resort நிறுவனத்தின் வியாபாரத்தை சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 25.04.2011 அன்று OA.No.178/2011 மற்றும் OA.No.179/2011 ஆகிய மனுக்களில் வழங்கிய உத்தரவின்படி பிரதிவாதி நடத்தி வருவதாகவும், மேற்படி East West Resort நிறுவனத்தை வாதி மற்றும் ராஜேஷ் ஆகியோரால் கடந்த 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்றும், பின்னர் 22.09.2009 அன்று மாற்றி அமைக்கப்பட்ட பங்குதாரர் பத்திரத்தின்படி வாதியின் மகள் அமிர்தா பெட்ரிக் பங்குதாரராக சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றும் தெரிவித்துள்ளார். அந்த ஆவணம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது,

13. பின்னர் 23.09.2009 அன்று ஏற்படுத்தப்பட்ட மாற்றி அமைக்கப்பட்ட பத்திரத்தின்படி J.S.R.Construction உரிமையாளர் ராஜேஷ் என்பவர் பங்குதாரர்

நிறுவனத்திலிருந்து வெளியேறி, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பங்குதாரர்களாக இணைந்து கொண்டதாகவும், பின்னர் 23.09.2009 அன்று மாற்றி அமைக்கப்பட்ட பங்குதாரர் பத்திரத்தின்படி வாதியும், வாதியின் மகள் அமிர்தா பெட்ரிக்கும் வெளியேறிவிட்டனர் என்றும், இந்நிலையில் வாதி, பிரதிவாதிகளை மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு, தான் பங்குதாரர் நிறுவனத்திலிருந்து வெளியேறவில்லை என்று மோசடியாக கூறிக் கொண்டும், வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் தன்னுடைய அனுபவத்தில் இருப்பதாக காட்டிக்கொண்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் OA.No.177, 178, 179 மற்றும் 180/2011 ஆகிய மனுக்களை தாக்கல் செய்து, அந்த மனுக்களில் 24.02.2011 அன்று ஒரு தடை உத்தரவை பெற்றார் என்றும் தெரிவித்துள்ளார். அந்த ஆவணம் **பி.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. இந்நிலையில் 178/2011–இல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி மேற்படி பிரதிவாதியின் East West Resort நட்சத்திர ஹோட்டலை பார்வையிட்டு, வழக்கறிஞர் ஆணையர் கடந்த 28.03.2011 அன்று ஒரு அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், அந்த அறிக்கையின்படி East West Resort நிறுவனத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துள்ளார் என்றும், அவ்வாறு அமைக்கப்பட்ட சுற்றுச்சுவருக்குள் ஒரு பகுதியாக தாவா சொத்தும் East West Resort–ன் அனுபவத்தில் இருப்பதை உறுதி செய்தும் அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

15. இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 22.03.2011 தேதியிட்ட உத்தரவின்படி ஏற்கனவே வழங்கிய 24.02.2011 East West Resort–ன் வியாபாரத்தை தொடர்ந்து நடத்த பிரதிவாதிகளுக்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டது என்றும், மேற்படி அனுமதி உத்தரவானது காலவரையின்றி நீடித்து உத்தரவு

வழங்கப்பட்டது என்றும், அந்த உத்தரவு இன்று வரை நிலுவையில் உள்ளது என்றும் கூறுகிறார்.

16. இந்நிலையில் வாதி மேற்படி சங்கதிகளை மறைத்து தன்னுடைய மற்றொரு நிறுவனமான கோரமண்டல் கிளப் என்ற நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி மேற்படி வாதி மற்றும் கோரமண்டல் கிளப் நிறுவனத்தின் சொத்துக்களை பிரதிவாதிகள் அபகரித்துவிட்டதாக ஒரு போலியான புகாரை அளித்து அந்தப் புகாரானது குற்ற எண்.110/2011–ன்படி காஞ்சிபுரம் மாவட்ட குற்றவியல் காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்டது என்றும், இந்நிலையில் வாதி மேற்படி சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி தான் மேற்படி East West Resort நிறுவனத்தின் பங்குதாரராக தொடர்ந்து நீடிப்பது போல போலியாக தெரிவித்துக் கொண்டு சுற்றுச்சுவரை இடித்து East West Resort–ன் வியாபாத்தை அபகரித்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்ததோடு மட்டுமல்லாமல், இடைக்கால மனு எண்.662/2013 என்ற மனுவை தாக்கல் செய்து ஒரு ஒருதலைபட்ச உத்தரவை பெற்றதாக கூறுகிறார்.

17. வாதி அந்த உத்தரவை பயன்படுத்தி கடந்த 31.08.2014 அன்று East West Re–sort–ல் கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவரில் ஒரு பகுதியை இடித்தும் பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்றும், எனவே, இது குறித்து East West Resort நிறுவனத்தின் மேலாளர் முரளி அளித்த புகாரின் பெயரில் ஸ்ரீபெரும்புதூர் காவல் துறையினர் குற்ற எண்.730/2014–ன்படி வழக்கு பதிவு செய்து குற்ற நடவடிக்கைகளில் வாதிக்கு துணையாக இருந்து செயல்பட்ட சில நபர்களை கைது செய்தனர் என்றும் தெரிவித்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை பி.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

18. இந்நிலையில் வாதி தான் சுற்றுச்சுவரை உடைத்ததை உறுதிபடுத்தியும், இந்த வழக்கில் இடைக்கால மனு எண்.662/2013–ல் வழங்கப்பட்ட உத்தரவை

மேற்கோள் காட்டியும் தனக்கு முன்பிணை வழங்க வேண்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.24067/2004 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றும், அந்த மனுவை விசாரணை செய்த மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 10.10.2024 அன்று மேற்படி வாதி தாக்கல் செய்த முன் பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது என்றும் அந்த உத்தரவில் சென்னை உயர்நீதிமன்றம் வாதி இடைக்கால மனு எண்.662/2013–ல் பெறப்பட்ட உத்தரவினை ஏற்றுக்கொள்ள மறுத்து, மேற்படி முன் பிணை மனுவை தள்ளுபடி செய்துள்ளது என்றும், இந்நிலையில் மேற்படி வாதியால் இடிக்கப்பட்ட சுற்றுச்சுவர் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு East West Resort நிறுவனம் தொடர்ந்து தனது வியாபார நிறுவனத்தை தாவா சொத்து உட்பட தன்னுடைய அனுபவத்தில் வைத்துக் கொண்டு ஆண்டு அனுபவித்து வருகிறது என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில் இந்த வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டது நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

19. இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "ஈஸ்ட் வெஸ்ட் ரிசார்ட் பங்குதாரர் நிறுவனத்தை எப்பொழுது ராஜேஷ் என்பவருடன் ஆரம்பித்தீர்கள் என்றால் 2008 ஆம் ஆண்டு துவங்கினேன். ஈஸ்ட் வெஸ்ட் பங்கு நிறுவனத்தை பொறுத்த அளவில் ஆர்பிட்ரேசன் நடவடிக்கை உங்களால் எடுக்கப்பட்டு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆர்பிட்டேஷன் நடவடிக்கையில் இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக உங்களுடைய அனுபவத்தில் உள்ள அசையா சொத்துக்களில் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்து இருந்தீர்கள் என்றால் மனு தாக்கல் செய்தேன் ஆனால் பிரதிவாதிகள் ஆட்சேபனை தெரிவித்ததால் உறுத்து கட்டளை பரிகாரம் வழங்காமல்

நிலுவையில் உள்ளது. இடைக்கால உறுத்து கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்கள் தெரியுமா என்றால் எனக்கு 87 வயது ஆகிறது. அது நினைவில் இல்லை மேற்படி கேள்விகள் வழக்கிற்கு தொடர்பு இல்லாதவை என்று சாட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அது பதிவு செய்யப்பட்டது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குறையை படித்துப் பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். எதிர்வழக்குரையில் பத்தி 15ல்ஆர்பிடேஷன் நடைமுறை குறித்த நடவடிக்கையை நிலுவையில் உள்ளது என்று குறிப்பிட்டு கூறியுள்ளதை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன் அது வழக்கிற்கு தொடர்பில்லாதது ஆகும். பத்தி 15ல் 22.2.2011 அன்று தாவா சொத்து குறித்தும் இடைக்கால தடைஉத்தரவு உங்களால் பெறப்பட்டது குறித்து பிரதிவாதிகள் சொல்லி உள்ள விவரத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அது தவறானதாகும். ஓ.ஏ.178/2017ல் 24.02.2011 அன்று வழக்கறிஞர் ஆணையர் நியமித்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன உத்தரவின்படி வழக்கறிஞர் ஆணையர் 12.03.2011 மற்றும் 19.03.2011 அன்று வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் சொத்துக்களை பார்வையிட்ட பிறகு அவருடைய அறிக்கையை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சம்பவ இடத்தை பார்வையிட்ட வழக்கறிஞர் ஆணையர் அவருடைய வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் தாவா சொத்தானது பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் சரியில்லை. அவர் குறிப்பாக வாதியின் சுவாதீனத்தில் இருப்பதாகத்தான் கூறியுள்ளார். வழக்கறிஞர் ஆணையர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையின் நகலை வைத்துள்ளீர்களா அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய

முடியுமா என்றால் என்னிடம் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை நகல் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 22.03.2011 அன்று ஏற்கனவே தங்கள் பெயருக்கு வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டு பிரதிவாதிகள் மேற்படி வழக்கு சொத்தில் வியாபாரத்தை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட்டது என்றால் சரிதான். நான் எதிர் வழக்கு ஆடாததால் எனக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நான் தான் அவர்கள் தொடர்ந்து வியாபாரம் செய்து வர அனுமதி வழங்கினேன்." என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து வாதியே ராஜேஷ் என்பவருடன் ஈஸ்ட் வெஸ்ட் ரிசாட் பங்குதாரர் நிறுவனத்தை துவங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கு சொத்தினை வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டு சுவாதீனத்தில் பிரதிவாதிகள் இருப்பதால் பிரதிவாதிகள் தொடர்ந்து வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். அதுமட்டுமல்லாமல் வாதி தான்தான் பிரதிவாதிகள் தொடர்ந்து வியாபாரம் செய்து வர அனுமதி வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே மேற்படி சாட்சியத்திலிருந்து பிரதிவாதிகள் நீண்டகாலமாக வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்துவருவது தெரியவருகிறது.

20. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருக்கும் சூழ்நிலையில் வாதியானவர் வழக்கு சொத்து குறித்து சுவாதீன ஒப்படைவு பரிகாரம் கோராமல் சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது, கட்டிடங்கள் எழுப்பக்கூடாது என்கிற பரிகாரம் மட்டுமே வழக்கில் கோரியுள்ளார். குறித்த வகை நிவாரன சட்டம் பிரிவு 41–எச்–ன்படி இந்த வழக்கில் கோரவேண்டிய அவசியமான பரிகாரமான சுவாதீன ஒப்படைவு பரிகாரம் கோராமல், பங்குதாரர் குறித்து அனைத்து சங்கதிகளையும் மறைத்து வழக்கு

தாக்கல் செய்துள்ளார். ஆகவே, வாதி இந்த நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அனுகவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. பிரதான பரிகாரம் கோராததால் இதர பொருண்மை குறித்து வழக்கில் தீர்மானிக்க தேவையில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. வழக்கு சொத்து வாதியின் சுவாதீனத்தில் இல்லாத சூழ்நிலையில் சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என்றும், கட்டுமானங்கள் மேற்கொள்ளக்கூடாது என்றும் வாதி பரிகாரம் கோரியுள்ளார். சுவாதீன மீட்பு பரிகாரம் கோராமல் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார். எனவே, பிரதிவாதிகள் வாதியின் சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என்கிற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே வாதி கோரிய, பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் வாதியின் சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என்கிற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 1 வாதிக்கு எதிராக முடிவு செய்யப்படுகிறது. வாதி சுவாதீன மீட்பு பரிகாரம் கோராததால், பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் கட்டுமானங்கள் கட்டக்கூடாது என்கிற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 2 வாதிக்கு எதிராக முடிவு செய்யப்படுகிறது. மேலும் வாதி கோரிய, வாதியின் சுவாதீனத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரமும், வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் கட்டுமானங்கள் கட்டக்கூடாது என்கிற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 1

மற்றும் 2 முடிவு செய்யப்பட்டுவிட்டபடியால் வாதிக்கு இதர பரிகாரங்கள் எதுவும் வழங்கத் தேவையில்லை என்று வழக்கெழுவினா 3 முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக இந்த அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 27–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.03.27 15:57:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.(பொறுப்பு)

<u>வாதி தரப்பு சாட்சிகள்.</u>

வா.சா.1 ஜேம்ஸ் பெட்ரிக்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.11.1977 | வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல். |
| வா.சா.ஆ.2 | -- | வாதி பெயரில் உள்ள பட்டா எண்.293 அசல் |
| வா.சா.ஆ.3 | 02.07.2013 | சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு |
| வா.சா.ஆ.4 | 31.12.2003 | வாதி பெயரில் தனி மாட்ட வருவாய் அலுவலர் அனுப்பிய நோட்டீஸ். |
| வா.சா.ஆ.5 | -- | வழக்கு சொத்திற்கான புல வரைபடம். |
| வா.சா.ஆ.6 | | வாதி, பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஜெராக்ஸ் நகல். |
| வா.சா.ஆ.7 | 29.08.2012 | வாதி பெயரில் வழங்கப்பட்ட கிஸ்த் ரசீது. |
| வா.சா.ஆ.8 | | வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்,</u>

பி.சா.ஆ.1 சத்தியமூர்த்தி

பி.சா.ஆ.2 முரளிகிருஷ்ணன்

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | | அங்கீகார கடிதம் அசல். |
| பி.சா.ஆ.2 | 17.03.2010 | East West Resort நிறுவனத்திலிருந்து வாதி விலகியதற்கான மாற்றியமைக்கப்பட்ட பங்குதாரர் பத்திரம் ஜெராக்ஸ் நகல். |
| பி.சா.ஆ.3 | 19.01.2026 | மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணிக்கை) |
| பி.சா.ஆ.4 | | சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த O.A.177/2011. 178/2011. 179/2011, 180/2011 ஆகியவற்றின் ஜெராக்ஸ் நகல். |
| பி.சா.ஆ.5 | 08.03.2011 | வழக்கறிஞர் ராமையா அளித்த வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை ஜெராக்ஸ் நகல். |
| பி.சா.ஆ.6 | 22.03.2011 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் O.A.177/2011. 179/2011. மற்றும் A.No.1708/2011 ஆகியவற்றில் வழங்கிய உத்தரவு உண்மை நகல். |
| பி.சா.ஆ.7 | | முதல் தகவல் அறிக்கை மற்றும் புகைப்படங்கள் நகல்கள், |
| பி.சா.ஆ.8 | | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த முன்பிணை மனு எண்.24070/2014 ஜெராக்ஸ் நகல். |
| பி.சா.ஆ.9 | 10.10.2014 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த முன்பிணை மனு எண்.24070/2014 தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவு உண்மை நகல். |

-

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.03.27 15:57:36 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம். (பொறுப்பு)